திரு. கே. என். குமாரசாமி : தொழிலாளர்கள் பாதிக்கப்படு கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு, மின்சார வெட்டு காரணமாகப் பாதிக்கப் பட்டவர்களுக்கு, சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களுக்கு ஏதாவது நஷ்டயீடு வழங்கப்பட்டதா அல்லது அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேறு ஏதாவது முறையில் நிவாரணம் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான், பாதிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை.

New Industries

* 845 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Branch of the National Alliance of Young Entrepreneurs has sought the co-operation of the Government in starting new industries in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாநிலப்பிரிவு, தொழில் முனைவர்களின் "நேஷனல் அல்லையன்ஸ்" நிறுவனத்தின் மூலமாக புதிய தொழில்கள் துவக்க வேண்டுமென்று சுமார் இருபது தொழில் முனைவர்கள் தமிழக அரசினை அணுகினர். அங்ஙனம் ஆரம்பித்த தொழில்களுள், ஆறு தொழிற்சாலைகள் தங்களின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன

திரு. கே. என். குமாரசாமி : சர்க்கார் தீர்மானிக்கிற தொழில் பட்டியலில், கிட்டத்தட்ட இருநூற்றுச் சில்லறை சிறு தொழில்கள் அந்தப் பட்டியலில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த இருநூற்றுச் சில்லறை தொழில்களில் பெரும்பாலும் அத்தியா வசியப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில்களாக இல்லை. எனவே அத்தியாவசியப் பொருள்களை—உணவு, கைத்தறி போன்ற வைகளை—உண்டாக்குகிற தொழில்களையும் இந்த பட்டியலில் சேர்த்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி, நேஷனல் அலையன்ஸ் நிறுவனத்தைப் பற்றியது. சிறு தொழில்களின் பட்டியலை மத்திய அரசு மிகுந்த பரிவோடு கவனித்து அதிகமாக எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டுதானிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த நாஷனல் அலையன்ஸ் மூலமாக ஒரு ஆறு யூனிட்கள் இப்போது ப்ரொடக்ஷனில் இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த ஆறு யூனிட்கள் எவை எவை என்று சொல்ல முடியுமா? பாக்கி 14 பொருள்களின் அப்பிளிகேஷன்ஸின் நிலை என்ன? இவர்களுக்கு எம்மாதிரியான உதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு.. செ. மாதவன்: நேஷனல் அலையன்ஸ் என்பது ஒரு தனி நிறுவனம். நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் இந்த முயற்சி எடுத்தால் நாங்கள் உதவி செய்கிறோம். அந்த ஆறு—

Mass media Printing and Publishing Private Limited.

Ananda Plastics.

Pandyan tyres.

Vaz International.

Ayyappa Industries.

Southern Agro Industries.

திரு. எம். சுரேந்திரன்: இந்த நாஷனல் அலையன்ஸ் நிறுவனம் எம்மாதிரியான அமைப்பைக் கொண்டது? அதில், இப்போது ஆரம்பித்திருக்கிற தொழிலில் எவ்வளவு மூலதனம் போட்டிருக்கிறார்கள்? எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்? பாக்டரிகளை எப்போது ஆரம்பிப்பார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாஷனல் அலையன்ஸ் என்று தொழிற்சாலையை ஆரம்பிக்கவில்லை. அவர்கள் சிபாரிசு செய்கிறார்கள். இந்த முயற்சியில் அவர்கள் ஒத்துழைக்கிறார்கள். இந்த நாஷனல் அலையன்ஸ் என்பதை அகில இந்தியாவில் டெல்லியில் அமைத்திருக்கிறார்கள். இதேபோல் 'போஸி' என்ற ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ்-னுடைய அசோஸியேஷனையும் டெல்லியில் அமைத்திருக்கிறார்கள். இவர்கள் அந்தச் சிறு தொழில்

அதிபர்களை எல்லாம் அழைத்து வேண்டிய ஆலோசனைகள் எல்லாம் சொல்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நம்மிடம் அணுகும்போது நாம் உதவி செய்கிறோம். நாம் 'ஸிட்கோ' மூலம் உதவி செய்கிறோம்.

Open Air Jails

* 846 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to start Open Air Jails at Muthupatti village. Sigangai taluk, Ramanathapuram district and at Vengadamangalam in Chingleput district?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஓப்பன் ஏர் ஜெயில் கைதிகளின் மனோபாவத்தை மாற்றி அவர்களை சீர்திருத்தக்கூடிய முறையில் அமையுமா? அப்படியென்றால் கறுப்புக் குல்லாய் என்று சொல்லக்கூடிய ஒரு வகைக் கைதிகள் இருக்கிறார்களே, அவர்களையும் இந்த ஓப்பன் ஏர் ஜெயிலில் போட்டு சீர்திருத்த சர்க்கார் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நோக்கத்தோடுதான் அது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில் இது நல்ல முறையில் நடை பெற்று வருகிறது. ஆனல் இந்தக் கறுப்புக் குல்லாய் இப்போது கிடையாது. கறுப்புக் குல்லாய் இப்போது போடுவது கிடையாது. வெள்ளைக் குல்லாய் இருந்ததையும் நம் அரசு வந்ததற்குப் பின்னுல் எடுத்துவிட்டோம். அவர்கள் சொன்ன வார்த்தை, நிரந்தரமாக இந்தத் திருட்டுத் தொழில் செய்பவர்களுக்குச் சொல்கிற வார்த்தையாகும். சேலத்தில் மட்டும்தான் அந்தக் கைதிகளை வைத்திருக்கிறார்கள். இங்கு இருப்பதாக நான் ஒத்துக்கொள்ளவில்லை. சேலத்தில் மட்டும்தான் அந்தக் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமா என்பது பரிசீலிக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் இரண்டு இடங்களில் ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள